ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய வாகனங்கள் இயங்கிக்கொண்டிருந்தாலுங்கூட, இரண்டு வாகனங்கள் engaged ஆக இருக்கும்பொழுது, மூன்றாவதாக அவர்கள் கேட்கும்பொழுது, அவர்களால் வாகனம் கொடுக்க இயலவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரெங்கராஜன், கேள்விக்கு வாருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: எனவே, மூன்றாவதாக அதிராம்பட்டினத்திற்கு மிக அவசியமான 108 ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்பதை என்னுடைய கோரிக்கையாக நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 108 அவசரகால ஊர்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே 200 புதிய ஊர்திகளை வாங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இவற்றைப் பகிர்ந்தளிக்கும்போது, அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கான தேவையினையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருத்தில் கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

30—

திருக்கோயில் புனரமைப்பு

***5062—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 மார்ச் 30]

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் நகர், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம், செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குக் கடந்த 26–10–1996 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் கடந்த நிலையில் திருப்பணி செய்ய திட்டமிட்டு, இத்திருக்கோயிலில் ரூ.46.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அனைத்துப் பணிகளும் முடிவுற்று 30–06–2012–க்குள் குடமுழுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழக உறுப்பினர்களின் இரத்தத்தோடும், இரத்தத்தின் சுழற்சியோடும், எங்கள் உணர்வுகளோடும் ஒன்றாகக் கலந்திருக்கிற, நாங்கள் நித்தம் வணங்குகிற எங்கள் காவல் தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) விளாத்திகுளம் தொகுதியில் 400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட இந்த விளாத்திகுளம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில், மீனாட்சி அம்மன் இருக்கக்கூடிய ஆலயமும், சுந்தரேஸ்வரர் இருக்கக்கூடிய மூலஸ்தானமும் சிதிலமடைந்திருக்கின்றன. சுற்றியிருக்கக்கூடிய 4 பக்க மாடச்

சுவர்கள் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய விளாத்திகுளத்தில் இருக்கக்கூடிய பெரியோர்கள், அறநிலையக் குழுவினர் சேர்ந்து புதிதாகக் கட்டுவதற்கு 5 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகளிலிருந்து வரும் மக்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில்தான் திருமணங்களை நடத்துகிறார்கள். அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக வழிபாடு செய்வதற்கு, விளாத்திகுளம் சுற்று வட்டாரப் பகுதி மக்கள் நன்கொடைகள்மூலமும், அரசின் உதவியோடும் இந்தத் திருக்கோயிலை அனைத்து சமூக மக்களும் பயன்பெறும் வகையில், திருக்கோயில்கள் மற்றும் ஆலயங்களையெல்லாம் சிறப்பாகப் புனரமைத்துக் கொடுக்கிற தமிழகத்தின் ஏழு கோடி மக்களினுடைய ஆராதனைக்குரிய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி), புதிதாக, சிறப்பாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலே இருக்கின்ற கோயில்களுக்கெல்லாம் நிதி ஒதுக்கப்பட்டு, சிறப்பாகப் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று வருங்காலத்தில் அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]